# ஜா எல பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 29 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 30 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜா எல பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கின்ற போது வெளிப்படுத்தப்பட வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதிக்கூற்றுக்களில் நிதிப் பிரிவுகள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ‘‘மைக்ரோ’’ வகையைச் சேர்ந்த கெப் வாகனத்தின் பெறுமதி ரூபா 100,000 தொகையினால் குறைத்து கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 05 கைவிரல் அடையாள இயந்திரங்களின் பெறுமதியான ரூபா 325,000 தொகையினைக் கணக்கு வைக்கும் போது ரூபா 390,000 தொகையாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் இயந்திரத்தைப் பொருத்துதல், மின்சார இணைப்பை

வழங்கிய செலவினம் ரூபா 15,000 தொகை என்பன கணக்குகளில் வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு உரித்தல்லாத வித்தியா நிவாச பிரிவெனா மஹா விஹாரைக் காணியில் முன்பள்ளிப் பாடசாலைக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக 2011 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,898,492 தொகை மீளாய்வாண்டின் காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின்போது வேலை பூர்த்தியடையாத 04 நிர்மாணங்களின் மதிப்பீட்டுக் கிரயமான ரூபா 1,282,090 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிவன்தம கெட்டவல நூலகத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த புத்தகங்களின் பெறுமதி ரூபா 10,000 மற்றும் தளபாடங்களின் பெறுமதி ரூபா 100,000 என்பன காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டில் கட்டிட நிர்மாணம், நூலகப் புத்தகங்கள் மற்றும் தளபாட உபகரணங்கள் கொள்வனவு என்பவைகளுக்காக ரூபா 1,549,582 தொகை மதிப்பீடு செய்யப்பட்டு 2011 ஆம் ஆண்டின் போது அதற்காக ரூபா 1,549,582 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதிகளுக்கிடையே ரூபா 8,775 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஒ) நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற காசு மீதி ரூபா 55,087,793 ஆக இருந்ததுடன் பிரதான காசேட்டின் பிரகாரம் மீதி ரூபா 55,456,690 ஆனமையால் ரூபா 368,897 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஓ) 2010 சனவரி மாதத்தில் அறவிடப்பட்டிருந்த தற்காலிக ஓய்வூதியம் ரூபா 12,649 தொகை அக்கணக்கிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வருமானக் கடன்பட்டோர் மீதி ரூபா 62,610,137 ஆனது நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் அம்மீதி ரூபா

53,952,916 ஆக இருந்தமையால் ரூபா 8,657,221 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

16 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 231,403,101 ஆக இருந்ததுடன் அதற்குரிய உப பதிவேடுகள்/ அறிக்கைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 157,765,524 ஆக இருந்தது.

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

பலவருட காலத்திலிருந்து முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 236,425 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியை மீளாய்வாண்டின்போதும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்தை விஞ்சிய மீளச்செலுத்த வேண்டியிருந்த வைப்புக்கள் ரூபா 33,604,224 ஆக இருந்ததுடன் செலவினக் கடன்கொடுத்தோர் ரூபா 42,463,428 ஆகும். இதற்கான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாமையினால் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட மீதிகளைத் தீர்மானிக்க முடியாதிருந்தது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

#### (அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) கணக்காய்வுக்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 6,281,754 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பனவற்றுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| **(அ)** 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| 24 (1) ஆம் பிரிவு | தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான பாதைகள் மற்றும் சிறிய பாதைகள் என்பவற்றின் திட்டத்துடன் பெயர்ப்பதிவேடு ஒன்று தயாரிக்கப்பட வேண்டியபோதிலும் சபையினால் பேணப்பட்ட வீதிப்பதிவேடு பல வருட காலத்திலிருந்து நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| (i) நி.பி 103(1) ஊ மற்றும் 760 | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட இருப்பு மெய்மையாய்வில் வெளிப்படுத்தப்பட்ட இருப்புப் பற்றாக்குறை சம்பந்தமாக தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 104 (1) | 2010 பெப்ரவரி 15 ஆந் திகதி பீபி-8666 ஆம் இலக்க கெப் வாகனத்தின் விபத்து மற்றும் 2011 சனவரி 12 ஆந் திகதி ஏற்பட்ட இழப்புக்கள் |

| | | |
|---|---|---|
| | | தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி 110 | இழப்புக்கள் மற்றும் நட்டங்களுக்கான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி 425(1) | கணக்காய்வு ஐயவினாப்பதிவேட்டில் 2006 யூன் 12 தொடக்கம் 2010 ஒக்தோபர் 04 வரையான காலப்பகுதியில் பெறப்பட்டிருந்த கணக்காய்வு ஐய வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 51,258,757 ஆக இருந்ததுடன், அதற்கு நேர்ஒத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 9,317,559 ஆக இருந்தது.

### 2.2 வங்கி இணக்கங்கள்

(i) மக்கள் வங்கியின் கந்தானைக் கிளையில் 175-1-001-74237296 ஆம் இலக்க கணக்கின் 2010 திசெம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்தும் 6 மாதங்களைக் கடந்திருந்த ரூபா 100,947 கூட்டுத்தொகையான மூன்று காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்ற தேறாத வைப்புக்கள் ரூபா 1,150 படியான இரண்டு குறிப்புக்கள் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் வைப்புக்களுக்குரிய திகதியிலுள்ள காசுக் கட்டளையும், காசோலையும் எவையென அறிந்து கொள்ளக்கூடிய முறையில் காட்டப்பட வேண்டிய இலக்கங்கள் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 3 வருடங்களுக்குரிய ரூபா 23,132 கூட்டுத்தொகையான 17 ‘‘நேரடி வரவுச்’’ சந்தர்ப்பங்கள் தொடர்பாகவும் குறைத்து வரவிடப்பட்ட ரூபா 253 மற்றும் ஏனைய செலவு ரூபா 10 என்பன தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொண்டு கணக்குகளுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பட்டுவத்த, தண்டுகம மற்றும் ராகம உபகாரியாலயங்களில் தேறாத வைப்புக்களாகக் காணப்படுகின்ற மீதியில் பி.ச.5 அறிக்கை மற்றும் சேகரித்தல் கணக்குகளில் காணப்படுகின்ற வங்கிக்கூற்றின் பிரகாரமான மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை.

(v) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் பட்டுவத்த மற்றும் ராகம உப காரியாலயங்களில் கையில் எஞ்சியிருந்த காசு பி.ச.5 அறிக்கையுடன் இணக்கஞ் செய்தபோது வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(vi) ஐந்தொகையின் பிரகாரம் (குறிப்பு 6) மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதி ரூபா 219,620 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 232,073 ஆக இருந்தமையினால் ரூபா 12,453 தொகை வேறுபாடொன்று வெளிப்படுத்தப்பட்டது. ரூபா 232,073 தொகை மீதியினுள் மதிப்பிழக்காத காசோலை மீதிகளும் உள்ளடங்கியிருந்ததுடன் காசோலை இலக்கம் மற்றும் திகதி என்பன குறிப்பிடப்படாமையினால் அவற்றினை தனித்தனியாக இனங்காண முடியாதிருந்தது. மேலும் மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 189 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அனேகமான காசோலைகளின் மீதிகள் 1988 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ள வாறானது | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்டது | 2009 உள்ள வாறானது | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா(000) | ரூபா(000) | ரூபா(000) | ரூபா(000) | ரூபா(000) | ரூபா(000) |
| (i) | வீதவரியும் வரியும் | 73,891 | 31,713 | 41,709 | 70,909 | 29,581 | 41,328 |
| (ii) | வாடகை | 13,285 | 3,018 | 10,598 | 13,791 | 2,513 | 11,278 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,148 | 1,362 | 543 | 2,299 | 1,859 | 440 |
| (iv) | ஏனைய வருமானம் | 7,811 | 5,066 | 2,737 | 9,184 | 6,350 | 2,834 |

2009 மற்றும் 2010 இன் நிதிக்கூற்றுக்களுடன் இணக்கம் செய்தபோது மேற்கூறப்பட்ட தகவல்கள் பிழையாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

### 2.3.2 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் கிட்டிய முன்னைய 03 வருடங்களின் நிலுவை வருமானம் சம்பந்தமான கீழே காணப்படுகின்ற விபரங்களின் பிரகாரம் அதிகரித்துச் செல்லும் தன்மை அவதானிக்கப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிலுவை வருமானத்தினைச் சேகரிப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

| திசெம்பர் 31 இல் உள்ளவாறு | ஆதனவரி | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2007 | 49,468,068 | 15,813,626 | 65,281,694 |
| 2008 | 44,589,002 | 17,967,732 | 62,556,734 |
| 2009 | 43,525,842 | 22,839,092 | 66,364,934 |
| 2010 | 41,647,007 | 24,823,233 | 66,470,240 |

### 2.3.3 நிலுவை மின்சாரக் கட்டணம்

வருமானக் கடன்பட்டோரின் கீழ் பலவருட காலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்த நிலுவை மின்சாரக் கட்டணம் ரூபா 2,193,448 தொகை மற்றும் தண்டப்பணம் ரூபா 27,282 தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிலுவை மீதி யாரிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது மற்றும் மீதிகள் எழுந்த மூலங்களோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ள வாறானது | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ள வாறானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 | ரூபா “000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணிக்கான வேதனம் | 51,501 | 41,416 | 10,085 | 40,393 | 39,913 | 480 |
| ஏனையவை | 91,365 | 243,853 | (152,488) | 72,377 | 136,932 | (64,555) |
| உப மொத்தம் | 142,866 | 285,269 | (142,403) | 112,770 | 176,845 | (64,075) |
| மூலதனச் செலவினம் | 9,340 | 3,019 | 6,321 | 71,620 | 56,741 | 14,879 |
| மொத்தம் | 152,206 | 288,288 | (136,082) | 184,390 | 233,586 | (49,196) |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளவாறானது |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 03 | 03 |
| இரண்டாம் தரத்தினர் | 41 | 31 |
| ஆரம்ப தரத்தினர் | 137 | 97 |
| ஏனைய(அமைய, தற்காலிக) | -- | 13 |

## 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.6.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

செயற்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள் சம்பந்தமான தெரிவுக் கணக்காயவுப் பரிசோதனைகளின்போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் 15 வாகனம் மற்றும் இயந்திர விடயங்கள் 1 தொடக்கம் 2 வருடங்கள் வரையான காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.6.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 9,266,308 ஆக இருந்ததுடன், சபையின் முற்கொடுப்பனவுகள் மற்றும் முற்பணங்களுக்குரிய காலப்பகுப்பாய்வு மற்றும் பட்டோலைகள் என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதியினை சரியாக கணிப்பீடு செய்ய முடியாதிருந்தது.

### 2.6.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பணங்களின் கூட்டுத்தொகை ரூபா 12,908,397 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 222,470 ஆக இருந்தது.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2000 யூன் 02 ஆந் திகதிய 04/2000 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் உப தலைவர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 2,500

தொகையான தொலைபேசிக் கட்டணம் மீளளிப்புச் செய்யக்கூடியதாக இருந்த போதும் வாடகை வாகனங்கள் வழங்குகின்ற தனியார் நிறுவனமொன்றிலிருந்து செயலாளர் ஜா - எல பிரதேச சபை / உபதலைவர் என்ற பெயரில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ‘‘ஒன் எப்றூவல்’’ பற்றுச் சீட்டினை அடிப்படைடயாகக் கொண்டு சபையின் உபதலைவருக்கு 2010 ஒக்தோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தொலைபேசிக் கட்டணமாக ரூபா 5,000 2010 திசெம்பர் 02 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

(அ) ராகம பத்துவே வடக்கு பட்டகமவில் அமைந்துள்ள திம்பிரிகஹவத்த மற்றும் வெரலபட கும்புர ‘‘என்ற 3 ஏக்கர் 01 றூட் 34 பேர்சஸ் அளவிலான காணி துண்டுகளாக்கப்பட்டு ஏலத்தில் விற்பனை செய்வதற்காக தனியார் சொத்து விற்பனைக் கம்பனியினால் 2007 ஆம் ஆண்டில் அங்கீகாரம் கேட்டு 1709 ஆம் இலக்க நில அளவை வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) திட்டத்தை அங்கீகரிப்பதற்கு வயல்காணியை நிரப்புவதற்காக கமநல சேவை ஆணையாளரின் அங்கீகாரத்தையும் பொது வசதிகளுக்காக 47.29 பேர்சஸ் உரித்துறுறுதியின் மூலம் சபைக்கு கையளிப்பதற்கும் உரிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யுமாறு சபையினால் உரிய கம்பனிக்கு 2011 மே 13 ஆந் திகதி அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தது.

(ii) இது சம்பந்தமாக களப்பரிசோதனைகள் மேற்கொண்டிருந்த தொழில் நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையின் பிரகாரம் வயல்காணி அனுமதியின்றி நிரப்பப்பட்டிருந்தமையினால் வதிவிடத்திற்கு தகுதியற்றதாகக் காட்டப்பட்டு அங்கீகாரம் வழங்குவதற்கு முடியாதிருந்ததாக 2007 மார்ச் 27 ஆந் திகதி தலைவருக்கு சிபார்சு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாமல் 2007 மார்ச் 29 ஆந் திகதி தலைவரினால் திட்டத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. செயலாளரும் அவ்வாறான சிபர்சினைச் செய்திருந்தார்.

(iii) அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த திட்டத்தின் பிரகாரம் பொது வசதிகளுக்கான நில அளவுகள் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் 2008 மார்ச் 12 ஆந் திகதி கம்பனியின் கடிதப் பிரகாரம் கடிதத்தின்

மூலம் சபைக்கு அதற்கான துண்டு இல. 35, 36 என்பவற்றை சபைக்கு ஒதுக்கித்தருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(iv) 2011மே 11 ஆந் திகதி பௌதீக ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இரண்டு நிலத்துண்டுகள் நிரப்பப்படாத பள்ளமான துண்டாகவும் உட்செல்லும் வழி ஏதும் இல்லாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டதுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் சட்டரீதியாக சபைக்கு கையளிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.9 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தண்டுகம, ராகம மற்றும் பட்டுவத்த உப காரியாலயங்களின் சேகரித்தல் கணக்குகளில் காணப்பட்ட தொகைகள் பிரதான வங்கிக் கணக்கிற்கு மாற்றப்படுவதற்காக நிலையான கட்டளை பெறப்படாதிருந்ததுடன் பி.ச.5 அறிக்கையின் (பொழிப்புக் காசேடு) பிரகாரம் உபகாரியாலங்களின் சேகரித்தல் கணக்குகளில் குறுகிய கால முதலீடுகளிலேனும் முதலீடு செய்யக்கூடிய மேலதிக காசு மீதி இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொது வசதிகளின் கீழ் 2005 ஆம் ஆண்டு முதல் 2008 வரை சபைக்குக் கையளிக்கப்பட்டிருந்த 8 றூட் 36.51 பேர்சஸ் அளவான 08 காணித்துண்டுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு காணி மற்றும் கட்டிடங்களில் கீழ் மூலதனமாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அவற்றின் சட்டரீதியான உரிமையினை கையேற்பதற்கும் ஆன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) களஞ்சியக் கட்டுப்பாடு